03.10.2023

அசல் வழக்கு எண்: 674/2010

வா.சா.1 சாட்சி நாகஜோதி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் சின்னவாகைகுளம் ஆகும். சின்னவாகைகுளம் என்பது பெரியவாகைகுளம் பஞ்சாயத்திற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். கருத்தமாயனின் தகப்பனார் பெயர் என்ன என்றால் அய்யாத்துரைதேவர் ஆகும். அய்யாத்துரைதேவரின் அப்பா பெயர் என்ன என்றால் தெரியாது. அதிவீர ராமபாண்டியனின் அப்பா பெயர் என்ன என்றால் மாயாண்டிதேவர் ஆகும். மாயாண்டிதேவரின் அப்பா பெயர் என்ன என்றால் தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்ட சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 13/2N1 ஆகும். சர்வே எண். 13/2 மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. சர்வே எண். 13/2 என்பதை சர்வே எண். 13/2A முதல் 13/2Z வரையிலும் சுமார் 40 உட்பிரிவுகளுக்கு மேல் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கிரையம் வாங்கிய இடத்தில் வேலை செய்தபோது பிரதிவாதிகள் தகராறு செய்தார்கள். அதனால் பிரதிவாதிகள் கிரையம் வாங்கியது தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆரம்பகாலத்தில் இந்த வழக்கை கருத்தமாயன் மற்றும் அதிவீர ராமபாண்டியன் ஆகியோர்கள் மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கருத்தமாயன் மற்றும் அதிவீர ராமபாண்டியன் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்களை சேர்த்துவிட்டார்கள் என்றாலும் நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்வதற்கு தனியாக மனு செய்து அந்த மனு

அனுமதிக்கப்பட்டதன் பேரில் சேர்ந்துள்ளேன் என்றால் சரிதான்.

1932ம் வருடத்திற்கு முன்பு தாவா சொத்தும், அதனுடன் நீட்டிக்கப்பட்ட சொத்தும் மொத்தம் 75 ஏக்கர் 10 செண்டு என்பது அரசாங்கத்திற்கு சொந்மான நிலமாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 75 ஏக்கர் 10 செண்டு என்பது சர்வே எண். 13/2 ல் கட்டுப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி 75 ஏக்கர் 10 செண்டும் 11.02.1932 ம் தேதியிட்ட DKT No. 23/41 என்ற உத்தரவின் அடிப்படையில் 13/2A முதல் 13/2Z வரை உட்பிரிவு செய்து பல்வேறு நபர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அவ்வாறு ஒப்படைப்பு செய்யப்பட்டபோது சர்வே எண். 13/2N என்ற 1 ஏக்கர் 94 செண்டு விஸ்திரணம்கொண்ட இடத்தை சின்ன சிவனான்டிதேவர் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1 ஏக்கர் 94 செண்டிற்கு சின்ன சிவனான்டிதேவர் பெயரில் 319 என்ற எண் கொண்ட பட்டா ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சின்ன சிவனான்டிதேவர் இறப்பிற்கு பிறகு அவருடைய வாரிசுகளான சி.ஆண்டிசாமிதேவர் மற்றும் சி.சிவமாயத்தேவர் ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. சின்ன சிவனான்டிதேவரின் காலத்திற்கு பிறகு அதே பட்டா எண்ணில் அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி சின்ன சிவனான்டிதேவரின் வாரிசுகள் இருவரும் கடந்த 1959ம் வருடம் சின்னவாகைகுளத்தை சேர்ந்த சின்ன கருப்பத்தேவர் மகன் பொன்னுச்சாமிதேவர் என்பவருக்கு ஆவண எண். 678/1959 என்ற ஆவணம் மூலம் ஒத்தி வைத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. மேற்படி ஒத்தி ஊர்ஜியத்தில் இருக்கும்போதே 1969 வருடம் ஆவண எண். 560/1969 என்ற ஆவணம் மூலமாக அதே பொன்னுச்சாமிதேவர் என்பவருக்கு மேல் ஒத்தி வைத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி பொன்னுச்சாமிதேவரிடம் ஒத்தியை மீட்காமல் சின்ன சிவனான்டிதேவரின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து மேற்படி 1 ஏக்கர் 94 சென்டை 2ம் பிரதிவாதியான மாயக்கால் என்பவருக்கு 1981ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் தவறு. மேற்படி கிரைய ஆவணத்தை வா.சா.ஆ 4 ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து கருத்தமாயன் மற்றும் அதிவீர ரமபாண்டியன் ஆகியோர்களுக்கு பூர்வீக சொத்து என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர்களுடைய முன்பாத்தியஸ்தர்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கருத்தமாயன் என்பவருக்கு பட்டா எண். 534 மற்றும் 619 ல் பாத்தியப்பட்டிருந்தது. அவரிடமிருந்து கிரையம் வாங்கினோம். மேற்படி பட்டா எண்கள் கருத்தமாயனுக்கு முன்பாக யார் பெயரில் தாக்கலாகி இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 பட்டா பாஸ் புத்தகத்தில் சர்வே எண். 13/2N என்பதை 13/2N1 மற்றும் 13/2N2 வாக உட்பிரிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சின்ன சிவனான்டிதேவரின் வாரிசுகளான சி.சிவமாயத்தேவர் மற்றும் சி.ஆண்டிச்சாமிதேவர் ஆகியோர்கள் 2ம் பிரதிவாதிக்கான மாயக்காளைத்தவிர வேறு யாருக்கும் வில்லங்கப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. சி.சிவமாயத்தேவர் மற்றும்

சி.ஆண்டிச்சாமிதேவர் ஆகியோர்கள் வாதிகளுக்கு கிரையம் கொடுக்காத நிலையில் சர்வே எண். 13/2N என்பதை சர்வே எண். 13/2N1 மற்றும் 13/2N2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்றால் சரியல்ல.

பட்டா எண். 534 என்பது 1, 2 வாதிகளால் உள்ளூர் வருவாய் அதிகாரிகளின் துணையுடன் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தாவா சொத்தில் கண்ட பகுதி சொத்தை கருத்தமாயத்தேவர் மற்றும் அவரது வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கிவிட்டேன் என்றால் 2010 ம் ஆண்டு கருத்தமாயனிடமும், 2012 ம் ஆண்டு அதிவீர ராமபாண்டியனிடமும் கிரையம் வாங்கினேன். அந்த கிரைய ஆவணங்கள் வா.சா.ஆ 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ 6 கிரைய ஆவணத்தில் பிரிவினை இல்லாத மொத்த சொத்தில் பாதி பாகத்தை கிரையம் கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 6 கிரைய ஆவணத்தில் கருத்தமாயத்தேவர் அவருடைய மைனர் மகனை கட்டுப்படுத்தியும், மேஜரான மகன்கள் சேர்ந்தும் கிரையம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 7 ஆவணத்தில் 1, 2 வாதிகள் மட்டும் கிரையம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே கிரையம் பெற்ற நிலையில் நான் வழக்கை தாக்கல் செய்யாமல் 1, 2 வாதிகள் வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணம் என்ன என்றால் பிரதிவாதிகள் பிரச்சனை செய்வதாக அவர்களிடம் சொன்னோம். அதனால் 1, 2 வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள்.

1 ம் பிரதிவாதி மீது நான் தனியாக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் அசல் வழக்கு எண். 557/2012 என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு மேற்படி வழக்கை

தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதிகள் எங்களிடம் பிரச்சனை செய்ததால் இடம் எங்களுக்கு வேண்டும் என்றும் அவர்களுடைய கிரைய ஆவணம் தவறு என்றும் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அசல் வழக்கு எண். 557/12 என்ற வழக்கு இருதரப்பு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்புக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம்.

தாவா சொத்துடன் நீட்டிக்கப்பட்ட 1 ஏக்கர் 94 செண்டை சின்ன சிவனான்டிதேவரின் வாரிசுகளிடம் மாயக்கால் கிரையம் பெற்று அவருடைய தனித்த சுவாதினத்தில் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. மாயக்கால் தனித்து அனுபவித்து வந்த நிலையில் 20.02.1996 ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு மேற்படி 1 ஏக்கர் 94 செண்டை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தை உள்ளடக்கிய 1 ஏக்கர் 94 செண்டை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் அனுபவம் செய்து வந்தபோது 1, 2 வாதிகள் இடையூறு செய்தார்கள் என்றாலும் 20.04.2010 ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றாலும் சரியல்ல. 20.04.2010 ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு உடனே எங்களுக்கு சர்பு செய்யப்பட்டது என்றாலும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு சம்பந்தமாக 06.05.2010 ம் தேதிதான் தெரியும் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சம்பந்தமாக எந்த பரிகாரமும் கேட்காமல் 1 ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை மட்டும் செல்லாது என்று அறிவிக்க கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

கடந்த 11.02.1932 ம் தேதி முதல் பிரதிவாதிகளும் அவர்களது

முன்பாத்தியஸ்தர்களும் தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகளுக்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. கடந்த 10.12.2010ம் தேதி பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக சொல்லப்பட்டுள்ள விபரம் சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்திலிருந்து கொடுத்த ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.12.2010ம் தேதி எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் அதனால்தான் வழக்கு மூலத்தில் அது சம்பந்தமாக எதுவும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

தாவா சொத்து எனது முன்பாத்தியஸ்தர்களின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு உரிமை அளிக்கக்கூடிய வா.சா.ஆ. 6 மற்றும் 7 ஆகிய ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு ஏற்பட்டுள்ள பட்டா பிழையானது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஏற்கனவே 1996ம் ஆண்டே கிரையம் பெற்று அனுபவம் செய்துவரும் நிலையம் 10.12.2010ம் தேதி தாவா சொத்தை கிரையம் கேட்டு பிரச்சனை செய்தார் என்று பிராதில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பிராதில் சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.